**திரு. கொளத்தூர் கோதண்டம்** : தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் தலைநகரமாக மாற்றப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகியும், குறிப்பாக மதுராந்தகம் போன்ற பகுதியிலிருந்து பஸ்கள் வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தப்பட்டும், வழித்தடங்கள் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால், உடனடியாக அந்த வழித்தடங்களை வழங்குவதற்கு அரசு உத்தேசிக்குமா? அத்துடன் தனியாருக்கு வழித்தடங்கள் வழங்குவதற்குப் போக்குவரத்துத் துறை அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளது. இதை யெல்லாம் உடனடியாகப் பரிசீலனை செய்து தலைநகரத்திற்குப் போவதற்கு அதிகமான பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : ஏற்கனவே நான் சொல்லியது போல போக்குவரத்து ஆணையாளர் அவர்கள் ஆலோசித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்குப் பிறகு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வரையிலே அரசாங்கப் பஸ் போக்குவரத்து போகிறது. காஞ்சிபுரம் வழியாக பல ஊர்களுக்கு அரசு போக்குவரத்து பஸ் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் சென்னையிலிருந்து காஞ்சீபுரம் வரையில் போகிற பஸ்ஸில் 1.46 காசும், காஞ்சிபுரம் வழியாக வேறு ஊர்களுக்குப் போகிற பஸ்களில் 1.90 காசும் வசூலிக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? ஆமெனில், இந்த வித்தியாசத்தைப் போக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Consequent on the shifting of the headquarters from Saidapet to Conjeevaram, people are put to great difficulty in getting into contact with headquarters of the district. Would the Government think of the possibility of connecting all taluk town centres with Conjeevaram by direct route instead of making them to change from place to place. Would the Government think of the possibility of offering direct route buses connecting headquarters of district with taluk headquarters ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இதுபோன்ற செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வருமானால், அது பற்றி பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கலாம்.

*Marriage advances to teachers of Local Bodies*

* 362 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government propose to grant marriage loans to teachers employed in Local Bodies too; and

(*b*) if so, how soon ?

1970 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆசிரியர்கள் உட்பட நகராட்சி மன்றப் பணியாளர்களுக்குத் திருமண முன்பணம் வழங்கும் திட்டத்திற்கு 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2255-ஆம் எண் அரசு ஆணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் உட்பட ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றில் பணி புரிபவர்களுக்கும் இந்தத் திட்டத்தை நீட்டிப்பது குறித்து அரசு முடிவெடுத்துள்ளது.

(இ) இது குறித்து ஆணைகள் நேற்றைய தினம் 12–3–1970-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இந்த அலுவலர்களுக்கு இந்தத் திருமணக் கடன் கொடுப்பதற்கு அவர்களுடைய சேமிப்பு நிதியில் பணம் இருக்கிற அளவுக்குக் கடன் கொடுக்கப்படுமா? அல்லது சேமிப்பு நிதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல், இந்தத் திருமணக் கடன் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலையைக் கொண்டு இந்தத் திருமணக் கடன் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** இந்தத் திருமணக் கடன் ஒவ்வொரு வருக்கும் எவ்வளவு ரூபாய் வழங்கப்படுகிறது? எத்தனை தவணைகளில் பிடிக்கப்படுகிறது? அதோடு, இரண்டாவது முறையாக திருமணம் செய்து கொள்பவர்களுக்கும் இந்தக் கடன் அளிக்கப் படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஆசியர்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படும் என்ற திட்டமான விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, ரூ. 500-க்கு மேற்படாத தொகை வழங்கப்படலாம் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறை திருமணம் செய்துகொள்வது சட்டப்படி குற்றமாகும். ஆகவே, விதிமுறை இடம் அளிக்குமானால், இடம் அளித்து அதைப் போல விண்ணப்பங்கள் வருமானால், அவைபற்றியும் பரிசீலிக்கப் படும்.

### மரக்காணம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்

*363 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், மரக்காணம் பேரூராட்சி மன்றம், குடி தண்ணீர் திட்டம் ஏதாவது தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இல்லை.